**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 01.07.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் கரும்பு இனப்பெருக்க நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

முதுகலை மாணவர்களின் ஆராய்ச்சியை எளிதாக்குவதற்காக 30.06.2023 அன்று கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் கரும்பு இனப்பெருக்க நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமானது இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் (ICAR) மதிப்புமிக்க சர்தார் படேல் சிறந்த நிறுவன விருது மற்றும் தேசிய நிறுவன தர வரிசை கட்டமைப்பின் (NIRF) 2023 தரவரிசையில் ஐந்தாம் இடத்தைப் பெற்றுள்ளது. அதே சமயம், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் (ICAR) கீழ் உள்ள பழமையான மற்றும் முதன்மையான விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களில் ஒன்றான மற்றும் சிறந்த நிறுவன விருது பெற்ற கரும்பு இனப்பெருக்க நிறுவனம், கடந்த பத்து சகாப்தங்களாக நாட்டின் கரும்பு வகைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் பங்கு வகிக்கிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் ந.செந்தில் அவையோரை வரவேற்று, இந்த ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை விவரித்தார். இரு நிறுவனங்களுக்கிடையில் உள்ள பொதுவான ஆராய்ச்சி ஆர்வங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயல்பாடுகள் குறித்து விவாதித்த தரப்பினர், மாணவர்களின் பயிற்சி மற்றும் தரமான முதுகலை ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காக நீண்ட கால ஒத்துழைப்பை மேற்கொள்ள முடிவு செய்துள்ளனர். இரக மேம்பாடு, மேம்பட்ட குளோனல் செயல் விளக்கம், ஜீனோம் எடிட்டிங் மற்றும் திசு வளர்ப்பு நுட்பங்கள், எலைட் குளோன்களின் நாற்றுகளை பெருமளவில் பெருக்குதல், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களில் மதிப்பீடு செய்வதன் மூலம் குறிப்பிட்ட வகைகளை அடையாளம் காணுதல் மற்றும் வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் தொழிற்சாலை உடன் இணைந்து செயலாற்றுதல் ஆகியவை அவற்றுள் சில.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர், முனைவர் இரா.தமிழ்வேந்தன் மற்றும் கரும்பு இனப்பெருக்க நிறுவன இயக்குனர் முனைவர் ஜி.ஹேமபிரபா, ஆகியோர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி முன்னிலையில் மாணவர்களின் நலனுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இருதரப்பு பிரதிநிதிகளும் இக்கையொப்பமிடும் நிகழ்வில் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**